1982 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிவாரணப் பிரச்னையில் விவசாயிகளுக்கு அரசு கடன் வழங்கி கிணறு தோண்டும்போது. எந்த டத்தில கிணறு தோண்டுவது என்று அரசே பார்வையிட்டு, அந்த இடத்தில் தோண்டும்போது, தண்ணீர் இல்லை யென்றால் அல்லது ஊற்று கிடைக்காவிட்டால் என்ன செய்வது என்பது பற்றி அரசே பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தர்மபுரியில் ஸ்டேடியம் கட்டும் திட்டம்.

* **வினா எண் 87—திரு. எஸ். அரங்கநாதன்**: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரியில் ஸ்டேடியம் கட்டும் திட்டம் ஏதும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ): ஆம். (ஆ): தருமபுரி ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு அருகாமையில் காலியாக உள்ள நிலத்தை விளையாட்டரங்கம் கட்டுவதற்காக தருமபுரி மாவட்ட விளையாட்டு மன்றத்திற்கு மாற்றிக் கொடுக்குமாறு அம் மாவட்ட ஆட்சித் தலைவர் நில வருவாய் ஆணையர் மூலம் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். சில நிபந்தனைகளுக்குட்பட்டு அந்நிலத்தை நீண்டகாலக் குத்தகைக்குத் தர சம்மதிப்பதாகப் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த நிலம் மாற்றம் செய்யப்பட்ட பின்னர், விளையாட்டு அரங்கம் கட்டப்படும்.

பணியிலிருக்கும் பொறியியல் பட்டதாரிகளின் மேல்நிலைப் படிப்புக்கான மாலை நேர வகுப்புகள்.

* **வினா எண் 88 — திரு. சோ அழகர்சாமி**: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொறியியல் பட்டதாரிகள் மேல்நிலைக் கல்வி (M.E) படிப்பை பணியில் இருந்துகொண்டே மாலை நேரத்தில் பயிலச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பொறியியற் பட்டதாரிகள் தற்போது பணியில் இருந்துகொண்டே, மற்ற முழு நேர மாணவர்களுடன் சேர்ந்து பட்ட மேற்படிப்பைத் தொடரும் வண்ணம் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆயினும் இவர்களை மாலை நேரத்தில் பயிலும் வண்ணம் செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.